# நம்மை வீழ்த்த எதிரிகள் எவ்வளவு பெரிய குழி வெட்டினாலும்,

# தி.மு.கழகத்தை எவராலும் தொட்டுக்கூட பார்க்க முடியாது!

## தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எச்சரிக்கை!



**சென்னை, பிப்.22-**

**சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.**

**தி.மு.கழக இளைஞர் அணியின் மாவட்ட-மாநகர-மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்துக்கு, கழக இளைஞர் அணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கினார்.**

**இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.இரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ் எம்.பி., க.பிரபு, பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி.ஆனந்தகுமார் மற்றும் புதுவை சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் தமிழ்நாடு மற்றும் வெளி மாநிலங்களிலிருந்தும் இளைஞர் அணி மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.**

**கழகத்தலைவர் - முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை மக்களுக்கு பயனுள்ள வகையில் கொண்டாட வேண்டும் என்பது தொடங்கி, மும்மொழிக் கொள்கையை திணிக்க முயலும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, தமிழ்நாடு முழுவதும் இளைஞர் அணி சார்பில் கண்டன பொதுக்கூட்டங்களை நடத்த வேண்டும் என்பது உட்பட 12 சிறப்புக்குரிய தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.**

**இதைத் தொடர்ந்து கழக இளைஞர் அணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது அவர், இந்தித்திணிப்பை என்றும் எதிர்க்க, 2026-ல் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் கழக அணி வெற்றி பெற்றிடும் வகையில், இளைஞர் அணியினர் முன்வரிசையில் நின்று பணியாற்ற வேண்டுமென குறிப்பிட்டார்.**

**அவர் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:**

மிகக்குறுகிய காலத்தில், நீங்கள் அனைவரும் சென்னைக்கு வந்து இந்த கூட்டத்தில் கலந்துகொண்டதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்று நாட்களுக்கு முன்புதான் உங்களில் பலரை இதே அரங்கத்தில் சந்தித்தேன். இளைஞர் அணியின் சார்பாக, இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சிக்கு வந்து இருந்தீர்கள். இன்று மீண்டும் சந்திக்கிறோம்.

### தனி உற்சாகம் பிறக்கிறது

தொடர்ந்து மூன்று நாட்களாக தொடர் நிகழ்ச்சிகள். நேற்று இரவுதான் திருச்சியில் இருந்து சென்னைக்கு வந்தேன். இன்று காலை ஒரு நிகழ்ச்சிக்கு சென்றேன். தொடர்ந்து பேசிக்கொண்டே இருப்பதால் எனது குரல் சரியில்லை. இருந்தாலும், உங்கள் ஒவ்வொருவரின் முகத்தைப் பார்க்கும்போதும், உங்களின் குரலைக் கேட்கும்போதும், உங்களின் எழுச்சியைப் பார்க்கும்போதும் சோர்வும் களைப்பும் காணாமல் சென்று தனி உற்சாகம் பிறக்கிறது. எல்லோரும் மிகுந்த எழுச்சியோடும், மகிழ்ச்சியோடும் கலந்துகொள்ள வந்திருக்கிறீர்கள்.

அதனால்தான் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அடிக்கடி என் உள்ளத்தில் இருந்து சொல்வது சட்டமன்ற உறுப்பினர், விளையாட்டுத்துறை அமைச்சர், இப்போது தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் இப்படி எத்தனையோ பொறுப்புகள் இருந்தாலும் எனது மனதிற்கு எப்போதும் நெருங்கிய பொறுப்பு என்றால், அது கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் என்ற பொறுப்புதான்.

### அறக்கட்டளை மூலம் உதவி!

ஒவ்வொரு முறை உங்களைப் பார்க்கும்போதும், உங்களுடன் இருந்து கழகப் பணியை ஆற்றும்போதும் மிகப்பெரிய அளவில் உற்சாகமும், மன நிறைவும், திருப்தியும் தானாக வந்து விடுகின்றன.

கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பாக, கழகத் தலைவரின் விளையாட்டை முன்னிட்டு, கிரிக்கெட் போட்டியை நடத்தினார்கள். 17 கழக அணிகள் அதில் கலந்துகொண்டார்கள். அதில் நம் இளைஞர் அணி மூன்றாம் இடத்தைப் பிடித்தது. அந்த அணியில் விளையாடியவர்களுக்கு, அதற்கு ஒத்துழைத்தவர்களுக்கு முதலில் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்குக் கிடைத்த பரிசுத்தொகை 50 ஆயிரம் ரூபாயையும் நம் இளைஞர் அணி அறக்கட்டளைக்குக் கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முறை மூன்றாவது இடத்தைப் பிடித்து இருக்கிறீர்கள். அடுத்த முறை நிச்சயம் வெற்றி பெறுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இளைஞர் அணியின் அறக்கட்டளைக்குத் தொடர்ந்து கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணியினர் எனப் பலரும் அளிக்கின்ற நிதியை ஒரு நிரந்தர வைப்புத் தொகையாக வங்கியில் வரவு வைத்துள்ளோம். மாதந்தோறும் அதன் வட்டித்தொகை மட்டும் 6 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் வந்து கொண்டு இருக்கிறது. அதை தலா 25 ஆயிரம் ரூபாய் என மாதந்தோறும் 25 கழகத்தினருக்கு மருத்துவ உதவி, கல்வி உதவி, கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி என தொடர்ந்து வழங்க உள்ளோம்.

சென்ற மாதம் முதன்முறையாக 15 கழகத்தினருக்கு உதவி செய்துள்ளோம். இளைஞர் அணி நிர்வாகிகளான உங்களின் பரிந்துரை, மாவட்டச் செயலாளரின் பரிந்துரையைச் சேர்த்து கொடுத்தீர்கள் என்றால், நிச்சயமாக நிதி உதவித்தொகை வழங்கப்படும் என்பதை, இந்த நேரத்தில் நன்றியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

### உழைத்தால் வாய்ப்பு வரும்!

இங்கு பலர் தீர்மானத்தை வாசித்தனர், தீர்மானங்களைப் பற்றிப் பேசினர். நம் திண்டுக்கல் மாநகரத் துணை அமைப்பாளர் பாபு மீரான் அவர்கள் சிறப்பாகப் பேசினார். கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆசிக்கின் பேச்சு, மாநாட்டிற்கு தயார்செய்து வந்தது போல இருந்தது.

திருச்சி மேற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அன்பழகன் அவர்களும் சிறப்பாகப் பேசினார். புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர், மாநில அமைப்பாளர் சம்பத் அவர்களும் தீர்மானத்தையொட்டி சிறப்பாக பேசியிருக்கிறார். நீலகிரி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இமயம் சசிக்குமார் அவர்கள் சிறப்பாகவும், ஆவேசமாகவும் பேசினார். பேசி முடிக்கும்போது, இளைஞர் அணியில் இருந்து, மாவட்டச் செயலாளர் ஆவதற்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள் என்று ஒரு வேண்டுகோளை வைத்தார்.

இப்போது இருக்கும் மாவட்டச் செயலாளர்களே பாதிபேர் இளைஞர் அணியில் இருந்து வந்தவர்கள்தான். அதுமட்டுமல்லாமல், மாவட்டச் செயலாளர்களாக, அமைச்சர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதற்கு இந்த அரங்கமே சாட்சி. அதற்கு முழுக் காரணம் அவர்களின் உழைப்பு. இந்த இயக்கத்திற்காக, தலைவர் அவர்கள் சொல்கின்ற பணிகளை எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி செய்யும்போது அதற்கான அங்கீகாரம் தானாக வரும். எதிர்பார்ப்போடு செய்வது சில நேரத்தில் தவறியும் போய் இருக்கிறது. எனவே, நிச்சயமாக வாய்ப்பு வரும்போது கண்டிப்பாக அதற்கான திறமைமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு உங்களுக்குத் துணையாக நான் நிச்சயமாக இருப்பேன்.

### நாமே முதன்மை அணி!

மாநிலத் துணைச் செயலாளர்கள் சார்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் பிரகாஷ் அவர்கள் பேசினார். அவரின் 15 வயது மகனை இளைஞர் அணியில் விரைவில் சேர்க்க இருப்பதாக ஒரு உற்சாகமான செய்தியைச் சொல்லி இருக்கிறார். எனவே, பிரகாஷ் அவர்களை தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது. தீர்மானத்தை ஒட்டி பேசிய அவைருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில மாதங்களுக்கு முன்புதான் சேலத்தில் இதுபோன்ற அமைப்பாளர்கள் கூட்டத்தில் சந்தித்தோம். பல்வேறு யோசனைகளை நீங்கள் சொன்னீர்கள். அதன்படி இன்றைக்கு அடுக்கடுக்காக, அடுத்தடுத்தப் பணிகளை மேற்கொள்ள உள்ளோம்.

இளைஞர் அணியைப் பொறுத்தவரை எந்த பணியாக இருந்தாலும் சரி, அது தலைமைக் கழகம் சொல்கின்ற பணியாக இருந்தாலும் சரி, அன்பகத்திலிருந்து உங்களுக்குத் தரப்படுகின்ற பணியாக இருந்தாலும் சரி, மாவட்டக் கழகம் வாயிலாக தரப்படுகின்ற பணியாக இருந்தாலும் சரி, அதையெல்லாம் முதலில் செய்து முடிக்கின்ற முதன்மை அணியாக நம் இளைஞர் அணி என்றைக்கும் திகழ்ந்துகொண்டு இருக்கும்.

### பொறுப்போடு பொறுப்புகள் நியமனம்!

இன்றைக்கு கழகத்தில் 23 அணிகள் இருக்கின்றன..தி.மு.க-வில் பல்வேறு அணிகள் இருந்தாலும் அத்தனை அணிகளிலும் முதல் அணி எதுவென்றால், நம் இளைஞர் அணிதான் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே பலமுறை பாராட்டி இருக்கிறார். அதை இன்று வரை தொடர்ந்து நாம் கடைபிடித்து வருகிறோம். ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகளை விரைவில் நியமிக்க வேண்டும் என்று சேலத்தில் சென்றமுறை சந்தித்தபோது வேண்டுகோள் வைத்தீர்கள்.

நம் மாநிலத் துணைச் செயலாளர்கள் எல்லாம் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று மிகப்பெரிய பணியைச் செய்தார்கள். நேர்காணல் நடத்தி, ஒவ்வொருவரையும் சந்தித்து அவர்களின் பணிகள், அவர்களின் மினிட் நோட்டுகள் எல்லாவற்றையும் என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார்கள். இப்போது தொடர்ச்சியாக ஒவ்வொரு மாவட்டமாக பொறுப்பாளர்களுக்கான அறிவிப்பு தொடர்ந்து வந்து கொண்டு இருக்கிறது.

நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், மாவட்டக் கழகத்தின் பரிந்துரை, ஒன்றியச் செயலாளர் பரிந்துரை, களத்தில் சிறப்பாக பணியாற்றியது உள்ளிட்ட அனைத்து அம்சத்தையும் வைத்துத்தான், இப்போது ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள் நியமனத்தை செய்துகொண்டு வருகிறோம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மூன்று மணி நேரம் ஒதுக்கி, அந்தந்தப் பொறுப்பு மாநிலத் துணைச் செயலாளர்கள், அன்பகம் செந்தில் ஆகியோருடன் மாவட்ட அமைப்பாளர்களையும் வரவழைத்து, அவரின் பரிந்துரையையும் வாங்கிக்கொண்டு பல மணி நேரம் செலவிட்டுத்தான், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் பகுதி, பேரூர் அளவில் நியமனத்தை நாங்கள் செய்துகொண்டு இருக்கிறோம். உங்களின் பணிகளுக்கு நிச்சயம் அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று, எதிர்ப்பு வந்தாலும் பரவாயில்லை, ஆதரவாக நீங்கள் மாற்றிக் கொள்வீர்கள், உங்களின் பணியின் மூலம் நிரூபிப்பீர்கள் என்று உங்கள் மீது இருக்கின்ற நம்பிக்கையின் பேரில்தான் நியமனங்களைத் தொடர்ந்து செய்து வருகிறேன்.

இதுவரை அறிவிப்புகள் வெளியான மாவட்டங்களில் மாவட்டச் செயலாளர்கள் முன்னிலையில் அறிமுகக் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. புதிய நிர்வாகிகள், மாவட்டக் கழகத்தோடும், ஒன்றியக் கழகத்தோடும் இணைந்து சிறப்பாகச் செயல்பட வேண்டும். அதற்கான வழிகாட்டுதல்களை, ஆலோசனைகளை மண்டலப் பொறுப்பாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் வழங்குவீர்கள் என்று நம்புகிறேன்.

### ஒன்றிய அளவில் பாசறைக் கூட்டம்!

விரைவிலேயே மீதமுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அறிவிப்புகளையும் வெளியிட இருக்கிறோம். அந்தப் பணி முடிந்ததும், ஏற்கனவே ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் `திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டங்களை' நடத்தி முடித்ததைப் போல, ஒன்றிய அளவில் பயிற்சி பாசறைக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று தலைவர் அவர்கள் நம்மிடம் கூறியிருக்கிறார். அதனையும் நாம் நடத்த இருக்கிறோம்.

இளைஞர் அணியின் சார்பாக சட்டமன்றத் தொகுதிதோறும், சமூக வலைத்தளப் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களையும் தொடர்ந்து நடத்திக் கொண்டு இருக்கிறோம். இதுவரை 70 சட்டமன்றத் தொகுதிகளில் இந்தக் கூட்டம் நடத்தப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு பாகத்துக்கு ஒரு சமூக வலைத்தளப் பொறுப்பாளர் என்று தேர்ந்தெடுத்து, பயிற்சிகள் வழங்கபட்டுள்ளன. தொடர்ந்து அவர்களின் செயல்பாடுகளைப் பார்த்து கண்டிப்பாக அவர்களுக்கும் விரைவில் பொறுப்பு வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சமூக வலைத்தளப் பயிற்சி மூலம் நல்ல முடிவுகள் வர ஆரம்பித்துள்ளன. சமூக வலைத்தள பயிற்சி பெற்ற இளைஞர்கள் பலர், நம் கொள்கைகள், கழகத்துக்கு ஆதரவான கருத்துக்கள், கழக அரசின் சாதனைகளை அதிக அளவில் சமூக வலைதளத்தில் பகிர்ந்தும், எழுதியும் வருகிறார்கள். அதற்கு என் வாழ்த்துகள். விரைவில், அனைத்துத் தொகுதிகளிலும் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்தி முடிக்க வேண்டும் என்று நாங்கள் முயற்சிசெய்துகொண்டு இருக்கிறோம்.

### பயிற்சி வகுப்பை மறக்க முடியாது!

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, தலைவர் அவர்கள் நமக்கு கொடுத்த பணியான, `என் உயிரினும் மேலான' பேச்சுப் போட்டியை வெற்றிக்கரமாக நாம் நடத்தி முடித்து இருக்கிறோம். தலைவர் அவர்கள் நம்மிடம் 100 இளம் பேச்சாளர்களை இளைஞர் அணி சார்பில் தேர்ந்தெடுத்து தலைமைக் கழகத்துக்கு கொடுங்கள் என்று கட்டளையிட்டார். ஆனால், நாம் தேர்ந்தெடுத்து கொடுத்தது 180. கலந்து கொண்ட 17 ஆயிரம் பேர்களை மண்டலம் வாரியாகப் பிரித்து கடைசியாக சென்னையில் ஒரு மிகப்பெரிய நிகழ்ச்சியை நடத்தி தேர்ந்தெடுத்தோம்.

இரண்டு நாட்களுக்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் பேச்சாளர்களுக்குப் பயிற்சிப் பாசறை முகாம்களையும் நடத்தி முடித்தோம். உண்மையிலேயே அந்த இரண்டு நாட்களும் மறக்க முடியாத நிகழ்வாக அமைந்தன. ஏகப்பட்ட பேச்சாளர்கள், விவாதக் களம் மாதிரியான பல்வேறு நிகழ்ச்சிகள், திறன் பயிற்சிகள், வினாடி வினா நிகழ்ச்சி என்று எந்தவொரு இயக்கமும், எந்தவொரு அணியும் எடுக்காத நிகழ்ச்சியை நம் இளைஞர் அணி, நம் இயக்கம் செய்து முடித்திருக்கிறது. அந்தப் பயிற்சி முகாம் வெற்றி பெற்றதற்கு இளைஞர் அணி நிர்வாகிகள் உங்கள் அத்தனை பேரின் உழைப்பும்தான் காரணம்.

> **“இந்தித் திணிப்புக்கு எதிரான நம் முழக்கம் இந்தியா முழுவதும் எதிரொலிக்கட்டும்”**

தமிழ்நாடு முழுக்க இருந்து பேச்சாளர்களை அழைத்து வந்து, பாதுகாப்பாக தங்க வைத்து, உணவு உள்ளிட்ட வசதிகளையும் பார்த்துப் பார்த்து செய்து கொடுத்துள்ளீர்கள். 2 நாள் பேச்சுப் பயிற்சி முகாமை மிகச்சிறப்பாக ஒருங்கிணைத்த அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் என் நன்றியையும் - பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தடுத்த நிகழ்ச்சிகளில் இந்த இளம் பேச்சாளர்களை இளைஞர் அணியினர் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் முதல் பயிற்சி முகாமை நடத்தி இருக்கிறோம். தமிழ்நாட்டின் நான்கு மண்டலங்களிலாவது இந்தப் பயிற்சி முகாம்களை ஒரு முறையாவது நடத்த வேண்டும். அதற்கான முயற்சிகளில் இறங்குவோம்.

### இல்லந்தோறும் இளைஞர்களை சேர்ப்போம்!

இப்போது மீண்டும் இந்தித் திணிப்பை கையில் எடுத்து இருக்கின்ற பாசிச பா.ஜ.க.-வை கண்டித்து தமிழ்நாடு தழுவிய அளவில் கண்டன பொதுக்கூட்டங்களை நடத்த இங்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தப் பொதுக்கூட்டங்களில் நம் இளம் பேச்சாளர்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு இளம் பேச்சாளர், ஒரு தலைமைக் கழகப் பேச்சாளர் என்று அழைத்து பொதுக் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, சட்டமன்றத் தொகுதிதோறும், கலைஞர் நூலகங்களை திறக்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் நமக்கு உத்தரவிட்டு இருந்தார். இதுவரைக்கும் 95-க்கும் அதிகமான கலைஞர் நூலகங்களைத் திறந்து இருகிறோம். ஏராளமான மாணவர்கள், இளைஞர்கள், கலைஞர் நூலகங்களைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். மீதமுள்ள நூலகங்களை விரைவில் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திறந்த நூலகங்களுக்கு அடிக்கடி சென்று சுத்தமாக இருக்கிறதா, புத்தகங்களின் நிலைமை சரியாக இருக்கிறதா என்பதையும் நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, களத்தில் நாம் மேற்கொண்டு வருகிற முக்கியமான பணி இல்லந்தோறும் இளைஞர் அணி பணி. இளைஞர் அணிக்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்று இந்தப் பணியை செய்துகொண்டு இருக்கிறோம். நம் திராவிட மாடல் அரசு செய்திருக்கின்ற சாதனைகளை ஒவ்வொரு வீடாக எடுத்துச் சொல்லுங்கள். அதற்கு பிறகு, அந்தந்த வீடுகளில் இருக்கின்ற இளைஞர்களை நம் இளைஞர் அணியில் கொண்டுவந்த சேருங்கள். 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்குள், கழக இளைஞர் அணியினர், இல்லந்தோறும் இளைஞர் அணி முன்னெடுப்பு மூலம், தமிழ்நாட்டில் உள்ள அத்தனை வீடுகளுக்கும் சென்று இருக்க வேண்டும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

### இளைஞர் அணிக்கு அதிக இடங்கள்!

இங்கு பேசிய நிர்வாகிகள் பலர் தேர்தல் பற்றி பேசினீர்கள். மாவட்டங்களில் நடக்கின்ற சீரமைப்புப் பணிகள் பற்றி பேசினீர்கள். குறிப்பாக, வர இருக்கிற 2026 தேர்தலில், இளைஞர் அணியை சார்ந்தவங்களுக்கு அதிக அளவில் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்து இருக்கிறீர்கள். கண்டிப்பாக, உங்களின் கோரிக்கையை, நம் தலைவர் அவர்களிடமும், தலைமைக் கழகத்திடமும் நான் நிச்சயம் வலியுறுத்துவேன். இந்தமுறை நிச்சயம், இளைஞர் அணிக்கு அதிக இடங்களைப் பெற்றுத் தருவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

உங்களின் பணிகளை மட்டும் சரியாகச் செய்துவிட்டீர்கள் என்றால் நிச்சயம் உங்களுக்கான அங்கீகாரம், சரியான நேரத்தில் உங்களைத் தேடி வரும். இங்கே 12 முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறோம். 12 தீர்மானங்களுமே மிக முக்கியமான தீர்மானங்கள். முதல் தீர்மானமாக, ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டுகின்ற வகையில் சிறப்பான திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் நம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மார்ச் 1-ஆம் தேதி முதல் மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை அரிட்டாப்பட்டியில் டங்க்ஸ்டன் சுரங்கம் அமைக்க ஒன்றிய அரசு எந்த அளவுக்குத் தீவிரம் காட்டியது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். அரிட்டாப்பட்டி மக்கள் டங்க்ஸ்டன் சுரங்கத்துக்கு எதிராக மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுத்தார்கள். மதுரையில் அரிட்டாப்பட்டி மக்கள் போராடியபோது நம் முதலமைச்சர் அவர்கள், போராட்டத்தை ஒடுக்க வேண்டும் என்று நினைக்காமல். அமைச்சர்களை உடனடியாக அனுப்பி வைத்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். சட்டப்பேரவையிலேயே முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். ‘நான் முதலமைச்சராக இருக்கிற வரை மதுரையில் டங்க்ஸ்டன் சுரங்கம் வராது’ என்று சட்டப்பேரவையிலேயே வாக்குறுதி கொடுத்தார்.

நம் அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால், முயற்சிகளால், டங்க்ஸ்டன் சுரங்கத்துக்கான ஏலத்தை ஒன்றிய அரசு ரத்து செய்தது. இதுதான் நம் அரசின் வலிமை. நம் முதலமைச்சர் அவர்களின் உறுதியான நடவடிக்கைக்குக் கிடைத்த வெற்றியாக இதை நாம் பார்க்கிறோம்.

நம் தலைவர் அவர்கள் தலைமையில் இதுவரை சந்தித்த அத்தனை தேர்தலிலும் வெற்றி பெற்ற தலைவர் அவர்கள் நம் தலைவர் அவர்கள்தான்.

நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் 11 தேர்தல்களில் வெற்றிபெற்று இருக்கிறோம். கடைசியாக நடைபெற்ற ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலிலும் கழகம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளுக்கு மக்கள் கொடுத்திருக்கின்ற ஒரு நற்சான்றிதழாகத்தான் இந்த வெற்றியைப் பார்க்கிறேன். ஈரோடு கிழக்கில் பணியாற்றிய இளைஞர் அணி தம்பிமார்கள் - நிர்வாகிகள் அத்தனைப் பேருக்கும் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆளுநரை மாற்றிவிடாதீர்கள்!

இன்றைக்கு ஒன்றிய அரசு பல்வேறு வழிகளில் தமிழ்நாட்டுக்கு பல்வேறு இடையூறுகளை தொடர்ந்து செய்து வருகிறது. முக்கியமாக நம் நிதி உரிமையிலும், மொழி உரிமையிலும், கை வைத்து இருக்கிறது ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு. சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய பட்ஜெட்டில், தமிழ்நாட்டுக்கு என்று ஒரு திட்டம் கூட ஒதுக்கவில்லை. ஒரு ரூபாய்கூட ஒதுக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் நம் மாநிலத்தின் தமிழ்நாடு என்ற பெயரைக்கூட பட்ஜெட்டில் இடம் பெற வைக்காமல் அவர்கள் தவிர்த்துவிட்டார்கள்.

சமீபத்தில், சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்கள் ஃபெங்கல் புயலால் பாதிக்கப்பட்டது. நம் முதலமைச்சர் அவர்கள், 6 ஆயிரத்து 675 கோடி ரூபாய் நிவாரணமாக வேண்டும் என்று கேட்டார். ஆனால், ஒன்றிய அரசு வெறும் 950 கோடியைத்தான் கொடுத்தது. நமக்கு தர வேண்டிய நிதியையும் பிற மூன்று மாநிலங்களுக்கு பிரித்துக் கொடுத்துள்ளார்கள். இதையெல்லாம் நாம் மக்களிடம் எடுத்துச்சொல்ல வேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு அரசை, ஆளுநரை அனுப்பி முடக்கிவிடலாம் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு பகல் கனவு

தொடர்ச்சி 13–ஆம் பக்கம்